[1979 மார்ச் 16

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்க சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 53/1961) 73-D பிரிவின் கீழ் சொல்லியுள்ளவாறு, மாநில சட்டமன்றத்தின் ஒப்புதலுடன், மத்திய கூட்டுறவு வங்கிகள், மற்றும் தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி பெறும் குறுகிய கால கடன், நடுத்தர காலக் கடன், நடுத்தரக் கால மாற்றுவசதிக் கடன்களுக்கு அரசின் உத்தரவாத உயரளவு வரையறையை முறையே ரூ. 250 இலட்சம், ரூ. 1,490 இலட்சம், ரூ. 7,400 இலட்ச அளவிற்குக் கூட்டுறவுத் துறையின் 1978-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் ஒன்பதாம் நாளிட்ட 82-ஆம் எண் அரசாணையில் தமிழ்நாடு அரசு உயர்த்தியுள்ளதாலும்,

மத்திய கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்தமட்டில் நடுத்தரக் கால மாற்றுவசதிக் கடனுக்கான உயரளவு உத்தரவாத வரையறையை ரூ. 10,900 இலட்சத்திற்கு உயர்த்துவது அவசியம் ஏற்பட்டுள்ளதாலும்;

தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 53/1961) 73-D பிரிவின் கீழ் சொல்லியுள்ளவாறு, மத்திய கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்தமட்டில் நடுத்தரக்கால மாற்றுவசதிக் கடனுக்கான உத்தரவாத வரையறையை ரூ. 10,900 இலட்சத்திற்கும், மொத்த வரையறையை ரூ. 12,640 இலட்சத்திற்கும் உயர்த்த தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை தீர்மானித்துள்ளது''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-52-மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(7) பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

119. தமிழ்நாடு 1977-ஆம் ஆண்டு கிராமப்புறக் கைவினைஞர் (குடியிருப்புகளுக்கு உடைமையுரிமை வழங்கல்) விதிகள் செய்வது குறித்த வருவாய்த் துறையின் 17—11—1977-ஆம் தேதியிடப்பெற்ற 2224-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு தமிழ்நாடு 1976-ஆம் ஆண்டு கிராமப்புறக் கைவினைஞர் (குடியிருப்புகளுக்கு உடைமையுரிமை வழங்கல்) சட்டத்தின் (குடியரசுத் தலைவர் சட்டம் 38/1976) 30(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை —